# பாரதமணி

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா ரூ. 4

| மாலை 4 | ஞாயிறு 9-6-40 விக்ரமஷூ வைகாசிமீ 27உ | முத்து 10 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

---

| விஷயம் | | பக்கம். |
|---|---|---|
| உலக வர்த்தமானம் ... ... ... ... | | 242 |
| தமிழ்நாட்டுச் செய்திகள் ... ... ... ... | | 244 |
| உதிர்ந்த மணிகள் ... ... ... ... | | 245 |
| இது தெரியுமா? ... ... ... ... | | 246 |
| இந்தியத் தற்காப்புக் கடன் வெளியீடு ... ... ... | | 247 |
| ஆற்றல் ... ... | ஆர். கே. விசுவநாதன், எம். ஏ. | 249 |
| கிராமங்களின் நிலைமையும் சீர்திருத்தும் வழிகளும் | வி. ரா. கணேசன் | 252 |
| காதலற்ற காதல் ... ... ... | எஸ். சங்கரன் | 255 |
| திரிச்சிராப்பள்ளிக் குகைக்கோயில்கள் ... | எல். என். குபீல் சுந்தரேசன் | 259 |
| சிறுவர் பகுதி ... ... | எஸ். ஸோமாஸ்கந்தன் | 261 |
| சரணகதி ... ... ... | ஆர். கோபால் | 264 |

---

“பாரத மணி” யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# உலக வர்த்தமானம்.

ஐரோப்பாவில் யுத்தம் நாளாவட்டத்தில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஜெர்மனி முன்னேறிக்கொண்டே வருகிறது. பகைவர்கள் ஈவிரக்கமின்றிப் பல இடங்களைக் குண்டுகளால் நாசமாக்கிக் கொண்டே வருகிறார்கள்.

பெல்ஜிய நாட்டுமன்னர் லியோபோல்டு செய்த காரியத்தை எல்லோரும் கண்டிக்கின்றனர். "நேச நாடுகளின் சிப்பாய்களை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்த மோசக்காரனென்றும் துரோகியென்றும்" சிலர் குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனால் "நாட்டின் க்ஷேமத்தை உத்தேசித்துத்தான் நான் இக்காரியத்தைச் செய்தேன்" என்று அவர் கூறுகிறார்.

காமன்ஸ் சபையில் பேசும்பொழுது டப்கூபர், "ஊர்களில் யுத்தத்தைப்பற்றிய உண்மையில்லாத வதந்திகளைப் பரவவொட்டாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும்; ஜெர்மன் நாட்டிலுள்ள நாஜிக் கட்சியல்லாத ஜனங்களை நேச நாடுகள் எப்படியாவது த்ங்கள் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டுமென்றும்" கூறினார்.

பெல்ஜிய மன்னரின் கூற்று பெல்ஜியத்திலுள்ள பிரஞ்சு ஜெர்மன் படைக்குப் பெருங் கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனாலும் அவர்கள் தைர்யத்தை இழக்கவில்லை யெனக் கூறப்படுகிறது. ஜெர்மன் சேனை டன்கர்க் வழியாகப் பிரஞ்சு நாட்டைப் படையெடுத்திருக்கிறது.

ஜெர்மானியப் படைகள் பிரான்ஸில் சில இடங்களைக் கைப்பற்றிக்கொண்டன. டன்கர்க்கில் குண்டு மாரி பெய்தன. கலேக்கருகில் பலத்த சண்டை நடந்து வருகிறது. கலே இன்னும் எங்கள் கையில் இருக்கிறதென நேச தேசத்தினர் கூறுகின்றனர். லியான்ஸ், மார்ஷேல்ஸ் முதலிய பட்டினங்களையும் ஜெர்மன் ஆகாயப் படைகள் தாக்கினவெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

ஜெர்மன் துருப்புகளின் எதிர்ப்பைத் தாங்க முடியாமல் பிரிட்டிஷ் பிரஞ்சு துருப்புகள் பின்னடைந்தன. சில துருப்புகள் இங்கிலாந்துக்குத் திரும்பிச்சென்றன. கடற்கரை யோரங்களில் பெருத்த யுத்தம் நடக்கிறதென்று தெரிகிறது.

அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு அடுத்த தலைவராக நியமித்த பால் மெக்னட், தற்காலத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ரூஸ்வெல்டே தகுந்த தலைவரென்றும், ஜனங்கள் விரும்புவதைத்தான் தானும் கூறுவதாகவும், அவர் இருந்தால்தான் நேச நாடுகளுக்கு உதவி செய்ய முடியுமென்றும் கூறினார். அதனால் ரூஸ்வெல்டே மறுபடியும் தேர்ந்தெடுக்கப் படுவாரெனத் தெரிகிறது.

முஸோலினி முக்கால்வாசி யுத்தத்தில் இறங்கி விட்டாரென்றே கூறவேண்டும். ஹிட்லர் அவரை நெருக்குகிறாரென்றும் கேள்வி. இரண்டு சர்வாதிகாரிகளுக்கும் கடிதப் போக்கு வரத்து முன்னை விடப் பலமாக நடக்கிறது. இத்தாலிக்கும் பிரிட்டனுக்கும் நடந்த சமாதானப் பேச்சு முறிந்து விட்டது.

ஜெர்மன் ஆகாயப்படைகள் பாரிஸ் நகரைத் தாக்கின. அநேக கட்டிடங்கள் சேதமாயின. பிரெஞ்சு ஆகாய எதிர்ப்புப் படைகள் அநேக எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின எனத் தகவல் கிடைத்திருக்கிறது.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

ஸ்ரீமதி சரோஜினி நாயுடு இம்மாதம் 7-ந் தேதியிலிருந்து ஒரு வாரம் தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறாரென்று தெரிகிறது. 8-ந் தேதி மாலை சங்கரன் கோவிலிலும், 9-ந் தேதி திருநெல்வேலி ஜில்லா தேசியக் கூட்டத்திலும் பேசப் போகிறார். பின்பு மதுரை, திருச்சி, தூத்துக்குடி முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து சென்னைக்கு வருவாரென்றும், சென்னையில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் பின்பு வெல்லூர் சென்று அங்கு நடக்கப்போகும் தேசியக் கூட்டத்தில் தலைமை வகித்துவிட்டுப் பிறகு வடக்கே செல்வாரென்றும் கூறப்படுகிறது.

வடக்கே ஜின்னாவும், தெற்கே ஈ. வே. ராமசாமி நாயக்கரும் இந்தியாவைச் சின்னபின்னம் பண்ணக் கிளம்பி விட்டாரெனத் தோன்றுகிறது. காஞ்சியில் நடந்த "தனித் திராவிட நாட்டுக் கூட்டத்தில் ஈ. வே. ரா. தமிழ்நாட்டுத் தமிழர்களெல்லோரும், தமிழ்நாட்டை இந்தியாவிலிருந்து பிரிப்பதற்குப் பின்வாங்குகிறார்களே யென்று ஓலமிடுகிறார். தமிழர்களுக்கு இன்னும் அவர்களுடைய நிலைமையை அறிய முடியவில்லையே யென்றும், ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பவர்களெல்லோரும் 'தீவிரமாக உழைத்தால் எங்கு வேலை போய்விடுமோ' என்று பயப்படுகிறார்களென்றும், தமிழ்நாட்டுப் பிரிவுக்கு ஜின்னா சாகேப்கூட உதவி செய்கிறேனென்று கூறியிருக்கிறாரென்றும் கூறிவிட்டு, நெற்றி வியர்வையைத் துடைத்துவிட்டு ஐஸ் போட்ட இளநீர்ப் பானம் சாப்பிட்டாரெனச் செய்தி கூறுகிறது.

சிதம்பரம் தாலூக்கா விவசாயிகள் கூட்டமொன்று சென்றமாதம் 28-ந் தேதி கலெக்டர் ஆபீசில் நடந்தது. அதற்கு தென் ஆற்காடு ஜில்லா, எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர் ஸ்டீபன்ஸ் தலைமைவகித்தார். சில மிராசுதார்களும் குடியானவர்களும் விஜயஞ் செய்திருந்தனர்.

சென்ற வருஷம் அய்யலூரில் ரயில் விபத்து நடந்தது. இந்த வருஷக் கந்தாயத்துக்கு திண்டிவனத்திற் கருகில் ஓர் கோர ரயில்விபத்து நடந்தேறியது. சென்ற மாதம் 28-ந் தேதி மத்தியானம் எழும்பூரை விட்டுச்சென்ற 'தனுஷ்கோடி பாசஞ்சர் திண்டிவனம் தாண்டி பாஞ்சாலம் ஸ்டேஷனைப் பாய்ந்து பிடிக்கும்பொழுது வாயு பகவானின் சேஷ்டையால் இக்கதி நடந்தது. அவ்விபத்தில் ஐவர் மரணமடைந்தனர், அறுபது பேர்கள் காயமடைந்தன ரென்றும் செய்தி கூறுகிறது. "பிரயாணிகள் ரயில் செல்லும்பொழுது ஜன்னல் கதவுகளைச் சாத்தாமல் இருந்தால் இவ்விபத்தைத் தடுத்திருக்கலாமென்று" ரயிலதிகாரிகள் ஓர் முடிவுக்கு வந்தனர்.

சென்ற மாதம் 29-ந் தேதி உதகமண்டலத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் மகாநாடு ஒன்று நடந்தது. விஜயநகரம் மஹாராணி அதற்குத் தலைமை வகித்தார். ஸர். கே. வி. ரெட்டியும் கூட்டத்தில் பேசினார். அதில் "இந்தியர்கள் இந்த அபாயகரமான நிலைமையில் பிரிட்டனுக்கு உதவி செய்யவேண்டு"மென்று ஒரு தீர்மானம் நிறைவேறியது.

# உதிர்ந்த மணிகள்

எல்லோரும் அவரவர்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்வாரானல், நம்முடைய எதிரிகளைப் புறங்காட்டி யோடச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைக் குறைவின்றிச் செய்வாரானல், நாம் நம்முடைய தேசத்தை யுத்த அரக்கனுடைய கொடிய கரத்தினின்றும் காப்பாற்றுவோம். நாமே தனியாகவே எவ்வெதிர்ப்பையும் எதிர்க்கக் கூடும். இதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை யுண்டு.

சர்ச்சில்.

* * *

ஐரோப்பிய யுத்தத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்பதுவே சர்க்காரின் கொள்கை. அது மாறுமல் இருந்து வருகிறது. ஆனல் தற்கால நிலைமை இக் கொள்கையை நீடிக்கச் செய்யுமா வென்பதுதான் சந்தேகம்.

ஜப்பான் மந்திரி யோனய்.

* * *

இப்பொழுது நாம் சிந்திக்கவேண்டியது, சுயராஜயப் போர் அல்ல. சுயராஜ்யம் கிடைத்தவுடனே அதை எப்படி பாதுகாப்பது என்பதிலேயே நாம் கவனம் செலுத்தவேண்டும்.

சுபாஷ் போஸ்.

* * *

பிரிட்டிஷ் சைன்யத்தில் ஐந்தில் நான்கு பங்கு காப்பாற்றப்பட்டது. போரில் ஒரு பகுதியை விட்டுவிட நேர்ந்தது. ஆனல் நாம் நல்ல படிப்பினை இதிலிருந்து தெரிந்துகொண்டோம். திரும்பிய துருப்பினர் நல்ல பழுத்துத் தேர்ந்த வீரர்களாய் விட்டனர்.

ஈடன்.

* * *

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் கோரிக்கைக்கு இணங்கத் தயங்குகின்றனர். இந்நாட்டில் அவர்கள் பெற்றுள்ள உரிமைகள் கொஞ்சங்கூடக் குறையாமல் இருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புவதே அந்தத் தயக்கத்திற்குக் காரணம்.

ராஜாஜி.

* * *

பித்தளை பித்தளைதான். தங்கமுலாம் பூசியதால், பித்தளைப் பாத்திரம் தங்கப் பாத்திரமாய்விடாது. இப்போதுள்ள சர்க்கார், இந்தியாவுக்குப் பொறுப்புள்ளவர்கள் என்று கூறமுடியாது; வெளிநாட்டாருக்கும் பொறுப்புள்ளவர்கள்.

ராஜாஜி.

* * *

"நம்மிடம் உண்மையிலேயே ஏதேனும் சக்தி இருக்குமாயின், அந்தச் சக்தியைக் காட்டுவதற்கு நமக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும். யுத்த இறுதியில் சமாதானம் என்று ஒன்றுண்டு. சமாதானம் ஏற்படும்பொழுது நம்முடைய சக்தியை உலகம் அறிந்துகொள்ளும். பிரிட்டன் அழிந்து அதன் பயனக இந்தியா விடுதலைபெற வேண்டும் என்று நாம் ஆசைப்படவில்லை. அது அஹிம்சை வழிக்கு முரண்பாடாகும்.

காந்திஜி.

* * *

புரட்சி வந்தே தீரும். அதற்கு இந்தியா பூரண அளவு தயாராக இருக்கவேண்டும். தேசப் படம் மாறி வருகிறது. உலகின் புதிய படத்தைத் தயாரிப்பதில் இந்திய மக்கள் பங்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

நேரு

* * *

தேச பாதுகாப்பு இந்தியருடைய உரிமை என்று உணரும்படிச் செய்யாதவரையில் தேசத்திற்காக உயிரைக் கொடுக்க உறுதி ஏற்படாது. ஜனங்களின் ஆவேச உணர்ச்சியைக் கிண்டிவிட அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும். சுதந்திரம் என்ற வார்த்தையே மந்திரக்கோல் போன்றது.

எ. ஆஸாப் அலி.

# இது தெரியுமா ?

## ஸியானேவ்க்குக் கல்தா ?

ரோம் நகரில் ஸியானேவைப்பற்றிப் பல வதந்திகள் உலவுகின்றன. வெளி நாட்டு மந்திரி பதவியிலிருந்து அவரை ஓர் சிறிய பதவிக்கு மாற்றப்படலாம் என்று சில ராஜீய வாதிகள் கூறிக்கொள்கிறார்கள். ஹிட்லரும் முஸோலினியும் ப்ரன்னரோ என்னுமிடத்தில் சந்தித்துப் பேசியபொழுது ஸியானேவைச் சேர்த்துக்கொள்ளவில்லை. ரிப்பன் ட்ராப்புடன் பேசத்தான் அவருக்கு முடிந்தது. காரணம் என்னவென்றால், ஸியானே நேச நாடுகளுடன் நேசப்பான்மையுடன் இருப்பதால்தான். ஹிட்லரே முஸோலினியிடம் 'ஸியானே நேசநாடுகளுடன் அதிக உறவு கொண்டாடுகிறா'ரெனக் கூறினர். இப் பேச்சு நடந்தது முதற்கொண்டு முஸோலினி நாட்டில் ரகசியப் போலீஸ்களை ஏற்படுத்தி, எக்காரியம் நடந்தாலும் தனக்குத் தெரியாமல் நடக்கக் கூடாது என்று ஓர் உத்திரவு போட்டார். ஆனல் சமீபத்தில் நடந்த ஓர் சம்பவத்திலிருந்து ஸியானே, ஹிட்லர் நினைத்தபடி யில்லை யெனத் தெரிகிறது. ஏனென்றால், ஸியானே தன்னுடைய பத்திரிகை 'டெலி கிருபோ'வின் வாயிலாக நேச நாடுகளைக் கண்டபடித் திட்டியிருக்கிறார்!

## ஹாலந்தில் நாஜிகள்

ஹாலந்தின் அரசியான ராணிவில்ஹெல்மினவுக்கு மிகவும் அத்யந்த நண்பனான ஒருவன், எவ்விதம் நாட்டிலே ஓர் நாஜி அரசாங்கத்தை நிறுவ ஏற்பாடு செய்தான், என்பது இப்பொழுது தெரியவருகிறது. ஜெர்மன் படைகள் நாட்டைப் படையெடுக்க ஆரம்பித்ததும், இம்மனிதன் நாஜித்தலைவரிடமிருந்து உத்திரவுபெற்று, ஆயுதந்தாங்கிய பல ஹாலந்து நாஜிகளை, அரண்மனையின் ரகசியக்கதவின் மூலமாக உள்ளேவிட்டு, அரண்மனையின் முக்கிய இடங்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டானும். ஹிட்லரின் ஐந்தாம் படையின் உபயோகம் இதுதான் என்று ஒருவர் எழுதுகிறார்.

## புத்திசாலியா எனத் தெரிந்துகொள்ள

வால்டர் பி. பிட்கின் என்பவர் புத்திமான்களைப்பற்றிய சில விஷயங்களைக் கீழே தருகிறார்.

புத்திமான்களுக்கு அநேகவிஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசை தோன்றும்.

அவ்விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்ய ஆவல் தோன்றும்.

விஷயங்களைப் பலவிதமாக வகுத்து ஒவ்வொன்றுக்கு முள்ள சம்பந்தங்களை ஆராயத் தொடங்குவார்கள்.

எல்லா விஷயங்களைப் பற்றியில்லாவிட்டால் கூட, சில விஷயங்களில் சாதாரண எவருக்கும் எட்டாத கல்பனை செய்வதில் சமர்த்தர்களாயிருப்பார்கள்.

காரியத்தில் தாமதித்தாலும், அக்காரியத்தை ஒழுங்காகச் செய்வார்கள்.

மற்றவர்களுடைய ஆவலையும், போக்கையும் நன்றாக அறியும் சக்தி அவர்களுக்கு உண்டு.

ஞாபக சக்தி புத்திமான்களுக்குச் சுமார்தான். அதுவும் சிற்சில விஷயங்களைப்பற்றித்தான் இருக்கும்.

பொறுமை பூர்ணமாக அவர்களிடம் காணப்படும்.

மானஸீகமாக உட்கார்ந்து கல்பனைசெய்வதிலும், விஷயங்களை ஊடுருவிப்பார்த்து யோசிப்பதிலும் சக்தி பெற்றவர்கள். ஆனல் அவர்களால் எவரையும் கட்டியாள முடியாது.

பிறரிடம் அதிகமாகப் பேசமாட்டார்கள். அவர்கள் இருக்கும் இடமே தெரியாமல் இருக்கும்.

# இந்தியத் தற்காப்புக் கடன்களின் வெளியீடு

சென்றவாரம் சேனாதிபதி ரேடியோவில் கூறிய பிரகாரம், ராணுவ விஸ்தரிப்புத் திட்டச் செலவுகளுக்காகப் பண வசதிகள் கிடைக்கும் பொருட்டு 10 வருஷத் தற்காப்புச் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளும், 6 வருஷ இந்தியத் தற்காப்புப் பத்திரங்களும், வட்டியில்லாத மூன்று வருஷக் கடன் பத்திரங்களும் இந்திய சர்க்காரால் வெளியிடப்பட்டிருக்கின்றன.

10 வருஷத் தற்காப்பு சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் ரூ. 10-லிருந்து 5000 வரையிலும் வாங்கலாம். 10 ரூ. மதிப்புள்ள ஒவ்வொரு சர்ட்டிபிகேட்டுகளுக்கும் முதல் வருஷத்திற்குப் பிறகு ஐந்தாவது வருஷம் வரையிலும், ஒவ்வொரு வருஷத்திலும் வட்டி 5 அணாவாகும். ஐந்தாவது வருஷ இறுதியில் 4 அணாவும், 10-வது வருஷ இறுதியில் 8 அணாவும் போனஸ் கொடுக்கப்படும். வட்டி போனஸ் எல்லாம் உள்பட 10 வருஷங்கள் கழித்து ரூ. 13-9-0 கிடைக்குமென்று தெரிகிறது.

இந்தியத் தற்காப்புப் பத்திரங்களோ 6 வருஷகாலமுடையன. வட்டி 3 சதவிகிதம். இவ்வட்டி 6 மாதத்திற்கொரு முறை கொடுக்கப்படும். இத்துடன் ஒரு சதவிகித போனஸும் கொடுக்கப்படும். இப்பத்திரங்கள் பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை முதலிய நகரங்களிலுள்ள ரிசர்வ் பாங்க் ஆபீஸ்களிலும், மற்ற இடங்களிலுள்ள இம்பீரியல் பாங்குகளிலும் கிடைக்கும். ஒரு குடும்பத்தில் ஒருவர் ரூ. 100 லிருந்து ரூ. 15,000 வரையில் பத்திரங்களில் பங்குகள் எடுத்துக்கொள்ளலாம்.

அவ்விதமில்லாமல் வட்டியில்லாமல் பணவுதவி செய்யவேண்டுமென்றாலும், அதற்காக மூன்று வருஷ வட்டியில்லாக் கடன் பத்திரம் இருக்கிறது. ரூ. 50 துக்குமேல் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் ரிசர்வ் பாங்குகளில் செலுத்தலாம்.

இப்பொழுது சர்க்கார் குடிகளிடமிருந்து கடன் வாங்குவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தற்சமயம் மேல் நாட்டில், யுத்த அரக்கன் தலைவிரித்தாடுகிறான். அந்த அரக்கன் இந்தியாவின் தலையிலும் கையை வைக்கமாட்டான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. நம் இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால் இந்தியப் படைகளை அதிகரிக்க வேண்டும். சேனாதிபதி கூறியபடி சேனையில் ஒரு லக்ஷத்துக்குமேல் நபர்களைச் சேர்க்கவும், விமானப் படையை நான்குமடங்கு அதிகரிக்கவும், மற்றும் பல படைகளையும் பெருக்கவே இப்பொழுது பணம் கோரப்படுகிறது. அதனால் ராணுவ சம்பந்தப்பட்ட எல்லாப் பதவிகளிலும் இந்தியர்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவார்கள். மற்றும் யுத்த தளவாடங்களையும், வெடிமருந்துகளையும் உற்பத்தி செய்யவும் பணம் வேண்டுமல்லவா?

மேற்படிச் செலவைச் சரிவரக் கூறுவது முடியாத காரியம். வரி மூலமாகவே எல்லாச் செலவையும் சமாளிக்க முடியவில்லையென்று நிதி மந்திரி அசெம்பளியில் அறிவித்தார். இதனால் தான் தற்காப்புத் திட்டங்களுக்குக் கடன் வாங்க வேண்டியிருந்தது. இந்தியத் தற்காப்பு ஏற்பாடுகளுக்கு உதவி செய்ய விரும்பும் எல்லோருக்கும் இது ஓர் தகுந்த சந்தர்ப்பமென்று சர்க்கார் அறிந்திருக்கிறார்கள். முன்பெல்லாம் சர்க்கார் பாங்க் அல்லது இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து கடன் பத்திரம் வாங்குவது வழக்கம். இப்பொழுது சர்க்கார் தனிப்பட்டவர்களின் சகாயத்தையும் நாடுகிறார்கள்.

தற்காப்புப் பத்திரத்தின் காலவரை 6 வருஷமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்பட்டதன் காரணம் என்னவென்றால், 1946-ம் வருஷம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க சர்க்காருக்கு முடியும் என்பதுதான்.

மேலே குறிப்பிட்ட மூன்று கடன்களும் நாளாவட்டத்தில் வசூலிக்கப்படும். கடன் கொடுக்க இஷ்டப்படும் ஜனங்கள் பத்திரங்களை வாங்கலாம். சமீபத்தில் ஜனங்களிடைப் போதிய பண நடமாட்டமிருப்பதால் பத்திரங்களை வாங்க அவர்கள் முடியும் என்று கருதப்படுகிறது.

# வரிப்பணம் எங்கே?

பிரஷ்ய நாட்டரசன் பிரடரிக் ஒரு வருஷம் அரசாங்க வரவுசெலவுக் கணக்கைச் சரிபண்ண முடியாமல் திண்டாடினன். இதைப்பற்றி யோசிக்க ஓர் விருந்து வைத்து அதற்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களை வரவழைத்தான். விருந்து நடந்து கொண்டிருக்கையில் "குடிகளின்மீது அதிக வரி போட்டும் கஜானுவில் என் பணஞ் சேரவில்லை?" யெனக் கேட்டான். எல்லோரும் பதில் சொல்லமுடியாமல் விழித்தார்கள். கடைசியில் ஓர் கிழவர் எழுந்து, பதார்த்தத்துடன் வைத்திருந்த ஓர் பனிக்கட்டியை யெடுத்துப் பக்கத்திலிருந்தவனிடம் கொடுத்து, அதை எல்லோருடைய கைவழியாக அரசனிடம் போகுமாறு கூறிவிட்டு உட்கார்ந்தான். பனிக்கட்டி அவ்விதமே சென்றது. பெரிதாக இருந்தபனிக்கட்டி அரசன் கையை அடைந்ததும் ஓர் கொட்டைப் பாக்குப் பரிமாணம் ஆயிற்று! இதிலிருந்து அரசன் வரி சமாசாரத்தையும் ஊகித்திருக்கலாம்.

## வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய

இந்தியாவில் இப்பொழுது வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கின்றது. அதைத் தீர்க்கக் கீழே சில உபாயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

வேலையும், கைத்தொழில்களும் குறைக்கப்பட்டு, கட்டாய ஆரம்பக் கல்வி முறை எற்படுத்த வேண்டும். பெருவாரியாகப் பொது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலை நேரங்கள் குறைக்கப்பட வேண்டும்.

புதிய கைத்தொழில்கள் எற்படுத்தி, வியாபாரத்தை விருத்தி செய்தும், வாழ்க்கை நிலையை உயர்த்தியும் வேலை யில்லாத் திண்டாட்டத்தை நீக்கலாம். நம்மால் உபயோகப்படுத்தப்படும் சாமான்களையே நாம் உற்பத்தி செய்யவேண்டும். இந்தியாவில் மூன்று பேர்களுக்கு இரண்டு கிண்ண அரிசிதான் இருக்கிறதென்பது ஒரு வெள்ளையர் கூறியிருக்கிறார்.

குடிசைத் தொழிலை விருத்தி செய்து அதன் மூலமாக வேலை யில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்திப்பது ஒரு நல்வழி. ஒரு விதமான பட்டு உற்பத்தியைக் குடிசைத் தொழிலாக எற்படுத்தி அதைச்சரியான விதத்தில் விற்பனைக்கு எற்பாடு செய்யலாம். மேற்படி பட்டு உற்பத்தியை யந்திர சாலைகள் மூலமாய்ச் செய்வதை சர்க்கார் தடுக்கவேண்டும். இவ்வாறு செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும்.

## அறிக்கை.

பாரதமணியின் அமைப்பைப்பற்றியும் அதில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளைப்பற்றியும் வாசகர்களிடமிருந்து அனுப்பப்படும் அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் வரவேற்கிறோம்.

வாசகர்கள் அவரவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் அரசியல், பொருளாதார சமூக சீர்திருத்தவிஷயங்களைப் பற்றிக் கூறும் யோசனைகளை ஆசிரியருக்கு எழுதும் கடித மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம்.

அக்கடிதங்கள் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆசிரியர்

# ஆற்றல்

(ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணாமலை நகர்)

பாய்ந்தோடும் ஆறுகளைக் கொண்டு யந்திரங்களை ஓட்டிவருகின்றோம். வீசும் காற்றைக் கொண்டு கிணற்றிலிருக்கும் நீரை இறைக்கச் செய்கின்றோம். மின்சாரத்தைக்கொண்டு டிராம் வண்டி, ரயில் வண்டி இவைகளை ஓடச்செய்கின்றோம். வெடிமருந்தைக்கொண்டு கற்பாறைகளை பிளக்கச் செய்கின்றோம். இந்நிகழ்ச்சிகளெல்லாம் விளைவதற்குக் காரணமாயிருப்பது ஆற்றல் எனப்படும். இதன் சொரூபங்களையும், இது ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறும்போது அதற்குண்டான விதிகளையும் இக்கட்டுரையில் பார்ப்போம்.

பொருள்களின் மீது சக்தி தொழிற்பட அவற்றின் நிலை மாறும்போது அச்சக்தி வேலை (work) செய்ததாகக் கூறப்படும். இவ்வேலையினளவை, சக்தியின் வலுவையும் பொருள் நகர்ந்த தூரத்தையும் பெருக்கிக் கூறுவார்கள். ஆற்றல் என்பது பொருளின் வேலைசெய்யக் கூடியதிறமையைப் பொருத்திருக்கிறது. சக்திகளில் அனேக வகைகளுண்டு. எனவே ஆற்றல்களிலும் பலவகையுண்டு என்று உணரலாம். எல்லாப்பொருள்களும் பூமியை நோக்கி இழுக்கப்படுகின்றன என்றும், இதற்குப் பூமியின் கவர்ச்சியே (Gravitational Force) காரணமென்றும் அறிவோம். இதன் பொருட்டு பொருள்களுக்குள்ள வேலைசெய்யும் திறமையைக் கவர்ச்சி ஆற்றல் என்பார்கள். நீர்வீழ்ச்சியின் ஆற்றல் இதற்குத்தக்கதொரு சான்றாகும். பொருள்களினுள்ளே தொழிற்படும் பலவித நெகிழ்ச்சி சக்திகளை (Elastic Forces) அறிவோம். விற்சுருள்கள் கொண்டுள்ள ஆற்றல் இதனாலேயே ஏற்பட்டதாகும். நிற்க ஒலி ஆற்றலும் இவ்வகையைச் சேர்ந்தது என்று இவ்விடம் குறிப்பிடத்தக்கது. திரவங்களின் பரப்பின் மீது தொழிற்படும் பரப்பு இசுவி (Surfacc Tension) னால் உண்டான ஆற்றல் மற்றொருவகையாகும். மேலும் மின்னியல் ஆற்றல், காந்தவியல் ஆற்றல், இரசாயன ஆற்றல் என்று வேறுவகைகளுமுண்டு. சமீபத்தில் அணுக்கருவு (Nucleus of the Atom) மிகுந்த ஆற்றல் வாய்ந்திருப்பதை விஞ்ஞானிகள் சோதனைகளினால் அறிந்திருக்கிறார்கள். கதிரியம் (Radium)என்னும் தாதுவின் அணுக்கருவினுள்ளேபதுங்கிக்கிடக்கும் ஏராளமான ஆற்றலைக்கண்டு விஞ்ஞானிகள் திகைத்துப்போனார்கள்.

ஆற்றலின் சொரூபங்களைப் பொதுவாகக் கூறுகையில் நிலைப்பு ஆற்றல் (Potential energy) என்றும், இயக்க ஆற்றல் (Kinetic Energy) என்றும் கூறுவார்கள். இதை விளக்க சில உதாரணங்களைக் கவனிப்போம். தரைக்கு மேலே உயரத்தில் ஒரு பொருளிருப்பதாகக் கொள்வோம். இப்போது இதன் ஆற்றல் முழுதும் நிலைப்பு நிலையிலிருப்பதாகக் கருதப்படும். இதைக் கீழே நழுவ விட்டால் அதன் உயரம் குறைவதால் அதன் நிலைப்பு ஆற்றல் குறைந்துவிடும். ஆனால் உடனுக்குடனே அதன் கதி அதிகரிப்பதால் அதற்கு இயக்க ஆற்றல் ஏற்பட்டுவிடுகிறது. அது தரையைத் தொடு முன் அதன் இயக்க ஆற்றல் உச்சநிலையை அடைகிறது. மற்றொரு உதாரணத்தைக் கவனிப்போம். வெடி மருந்தைப் பற்றவைக்காத வரையில் அது நிலைப்பு ஆற்றலைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். பற்றவைத்தவுடன் அளவு மிகுந்தபுகை அதினின்று வெளிப்படக் கற்பாறைகள் முதலிய பளு மிகுந்த பொருள்களையும் தூக்கி எறியக்கூடிய இயக்க ஆற்றலைப் பெற்று விடுகிறது. ஆகையினால் தம்முடைய நிலையினாலோ அல்லது இயக்கமல்லாத வேறொரு காரணத்தினாலோ பொருள்கள் ஆற்றல் கொண்டிருந்தால் அதை நிலைப்பு ஆற்றல் என்றும், தம்முடைய இயக்கத்தினால் ஆற்றலைப் பெற்றிருக்கும்போது அதை இயக்க ஆற்றல்

என்றும் கூறுவதை இப்பொழுது நன்குணரலாம்.

ஆற்றல் ஒரு சொரூபத்திலிருந்து மற்றொன்றக்கு மாறும் போது சில விதிகளுக்குட்பட்டே இது நிகழ்கிறது. விஞ்ஞானிகள் இவற்றை ஆராய்ந்து ஆற்றலின் அழிவின்மை விதி என்றும் (Conservation of Energy), வெப்ப இயக்கவியல் முதல் விதி என்றும் (First Law of Thermo Dynamics) வெப் இயக்கவியல் இரண்டாவது விதி என்றும் (Second Law of Thermo Dynamics) வகைப்படுத்திக் கூறியிருக்கிறார்கள். சொரூப மாறுபாட்டிற்குச் சில திருஷ்டாந்தங்களைக் கூறிய பின்னர் இவ்விதிகளைக் கவனிப்போம். மிகுந்த அளவில் மின்னருவி உற்பத்தி செய்யும் முறைகளை எடுத்துக் கொள்வோம். நீர் வீழ்ச்சி உள்ள இடங்களில் அந்நீரைக் கொண்டு பெரிய பல்லுருளைகளை (Turbines) இயக்கி, அதனல் அவற்றுடன் இணைக்கப்பட்ட 'டைனமோ'க்கள் வேலை செய்ய மின்னருவி பெறப்படுகிறது. இங்கே நீரின் இயக்க ஆற்றல் மின்னியல் ஆற்றலாக மாறிவிட்டது. பின்னர் இதைக்கொண்டு விளக்குகளையும், அடுப்புகளையும் உபயோகிக்கும்பொழுது அதை ஒளியாற்றலாகவும்,வெப்ப ஆற்றலாகவும் மாற்றுகிறோம். மற்றொரு முறையில் மின்னருவி பெறப்படும் விதத்தைக் கவனிப்போம்: நிலக்கரி எளிதில் கிடைக்கக்கூடிய இடங்களில் அதைக் கொண்டு நீராவியை உண்டாக்கி, அந்நீராவியினல் முற்கூறப்பட்ட பல்லுருளைகளை இயக்கி அதனல் 'டைனமோ' க்கள்வேலை செய்ய மின்னருவியைப் பெறுகிறார்கள். இங்கே ஆற்றல் வெப்ப வியலிலிருந்து மின்னியல் சொரூபத்திற்கு மாறியது விளங்கும்.

வெப்ப இயக்கவியல் முதல் விதி எனப்படுவது ஆற்றலின் சொரூப மாறுபாட்டைப் பற்றியதொரு விதியாகும். ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பத்தை உண்டாக்குவதற்கு வேண்டிய இயக்க ஆற்றலை இது எடுத்துரைக்கின்றது. அதாவதுஇயக்கஆற்றல்வெப்ப ஆற்றலாகவோ அல்லது வெப்ப ஆற்றல் இயக்க ஆற்றலாகவோ மாறும்பொழுது இரண்டிற்குமுள்ள தகவு மாறுது ஒரே அளவினதாயிருக்கும் என்ற கருத்தை எடுத்துரைக்கின்றது. 1840- ஆம் ஆண்டில் ஜூல் (Joule) என்பவர் இங்கிலாந்தில் ஆராய்ச்சிகள் நடத்தி இவ்விதியைக் கண்டு பிடித்தார். சில எடைகளைக் குறிப்பிட்ட உயரத்திலிருந்து கீழிறங்கச்செய்து, அது செய்கின்ற வேலையைக் கணக்கிட்டுப் பின்னர் இந்த இயக்கத்தினல் ஒரு பாத்திரத்திலுள்ள துடுப்புகளை (Vanes)ச் சுழலுமாறு செய்து, அதனல் பாத்திரத்திலுள்ள நீரின் சூடு எவ்வளவு அதிகரித்தது என்று கண்டு உண்டான வெப்பத்தையும் கணக்கிட்டார். பன்முறை இப்பரிசோதனையை நடத்தி இவ்விரண்டு ஆற்றல்களுக்கும் உண்டான உறவைக் கண்டுபிடித்தார். இதை முதன் முதலில் எடுத்துரைத்த பெருமை இவரைச் சார்ந்ததினல் இவ்விதி இவரது பெயரால் விளங்குகிறது. இவருக்குப் பின்னர் "ரௌலாண்டு" (Rowland) என்ற விஞ்ஞானி இதே முறையில் ஆராய்ச்சிகள் நடத்தி இவற்றின் தகவை (Ratio) இன்னும் திருத்தமாகக் கண்டார். நிற்க, இக்கட்டுரையின் தொடக்கத்தில் நிலைப்பு ஆற்றலுக்கும், இயக்க ஆற்றலுக்கும் உள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுவதற்குக் கூறிய உதாரணத்தை மறுபடியும் கவனிப்போம். உயரத்திலிருந்து கல் கீழே விழும்போது அதன் ஆற்றல் நிலைப்பு நிலையிலிருந்து இயக்க நிலக்கு மாறுவதைப் பார்த்தோம். கணக்கிட்டுப் பார்த்தால் எந்த நிலையிலும் அதன் மொத்த ஆற்றல் மாறிலியாக (Constant) இருப்பது தெரியவரும். இச்சம்பவத்திலிருந்தும், ஜூலின் விதியிலிருந்தும் ஒருண்மையை எடுத்துரைக்கலாம். இப்பிரபஞ்சத்திலுள்ள மொத்த ஆற்றல் ஓர் மாறிலியாகும். அதாவது, ஆற்றலின் சொரூபம் மாறும்பொழுது அதன் அளவு மாறுவதில்லை. இதையே ஆற்றலின் அழிவின்மை விதி என்று கூறுவார்கள். விஞ்ஞானித் துறைகள் எல்லாவற்றிலும் இவ்வுண்மை அனுஷ்டிக்கப்படுவதை உணர்ந்தார்கள்.

இவ் வழி வின்மை விதியுடன் "கெல்வின்" (Kelvin) என்ற பிரபல விஞ்ஞானி எடுத்துரைத்த வெப்ப இயக்கவியல் இரண்டாவது விதியையும் சேர்த்துக் கூறவேண்டியிருக்கிறது. உதவியின்றி வெப்பம் தாழ்ந்த சூட்டிலிருந்து உயர்ந்த சூட்டிற்குச் செல்லாது என்பதே இவ்விரண்டாவது விதியாகும். இதில் ஏதும் புதிது ஒன்றுமில்லை. மட்ட வேற்றுமை யன்றி நீர் பாயாது. அது போலவே மட்ட வேற்றுமையன்றி ஆற்றலும் செல்லாது. இவ்வாறு ஆற்றலை மாற்றும்போது சிறிது பாகம் ஒவ்வொரு தடவையும் பிரயோஜனமற்றதாக ஆகிக் கொண்டே வருகிறதென்றும், அதனால் மாறக்கூடிய ஆற்றல் வரவர குறைந்து வருகிறதென்றும், முடிவில் ஆற்றல் முழுதும் பிரயோஜனமற்ற நிலைக்கு வந்துவிடுமென்றும், அப்பொழுது பூமியில் ஒன்றும் நிகழாது என்றும், இவ் விரண்டாம் விதியை விரிவு படுத்திக் கெல்வின் எடுத்துக் காட்டினர். ஆகையினால் ஆற்றலின் அழிவின்மை விதியைக் கூறும்பொழுது ஆற்றலின் சொரூபம் மாறினால் சிறிது பாகம் பிரயோஜனமற்றதாகி விடுகிறதென்றும் மொத்த ஆற்றல் மாறிலியாக இருக்கும் என்றுஎடுத்துரைக்கவேண்டும்.

கடைசியாகப் பிரபஞ்சத்திலுள்ள ஆற்றல் முழுமைக்கும் மூல காரணத்தைப் பற்றிச் சிறிது விசாரிப்போம். பூமியில் தோன்றும் எல்லா வகை ஆற்றல்களும் ஞாயிறின் கிரணங்களின் விளைவே என்று அறியலாம். சூரியனது கிரணங்களினால் பூமியின் மேற்பகுதியும், அருகிலுள்ள பவனமும் பல வேறாகச் சூடேறுவதால்தான் காற்று வீசுவது, அடிப்பது எல்லாம் உண்டாகிறது. மேலும் சூரிய கிரணங்களினால்தான் மேகங்கள் ஈரத்தைப் பெற்று அதை மழையாகப் பொழிந்து ஆறுகள், குளங்கள் நிரம்புவது சாத்தியமாகிறது. நீராவி யந்திரங்களுக்கு வேண்டிய நிலக்கரி சூரியனது ஆற்றலின் சிறிது பகுதியை அதனுள் அடக்கி வைத்திருந்ததினால்தான் நீராவியை அடைகிறோம். மனிதனது செய்கைகள் அனைத்திற்கும் காரணம் அவன் உண்ணும் உணவே. உணவுப் பொருள்களெல்லாம் சூரிய கிரணங்களின் சக்தியினால் ஏற்பட்டனவே யாகும்.

## அறிக்கை

பாரதமணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கிய விஷயங்கள் :—

(1) கதைகளோ கட்டுரைகளோ பாரதமணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாஸமும், அவர்கள் வயதும் தொழிலும் குறிக்கப்பட் டிருக்கவேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினாலொழிய, பிரசுரத்துக்கு அங்கிகரிக்கப் படாத கதைகள் கட்டுரைகள், திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆசிரியர்




# கிராமங்களின் நிலைமையும் சீர்திருத்தும் வழிகளும்.

(வி. ரா. கணேசன்)

இந்திய நாடு வேளாண்மையையே முக்கியமாகக் கொண்டுள்ள நாடு. நம் நாட்டில் சுமார் ஏழுலட்சம் கிராமங்கள் ஆங்காங்கே அமைந்துள்ளன. நம் நாட்டிற்கு சுதந்திரம் வரவேண்டுமானல், நாட்டிலுள்ள ஜனங்க ளெல்லோரும் கல்வியறிவு உள்ளவர்களா யிருக்கவேண்டும். ஆனல் தற்போதைய நிலைமை யென்ன? நம் நாட்டில் நூற்றுக்கு 8 பேர்தான் கல்வி வாசனை அறிந்தவர்களா யிருக்கின்றனர். ஏன்?

நம் நாட்டிலுள்ள ஜனங்களில் சுமார் நூற்றுக்கு எழுபது பேர் கிராமவாசிகள். நாட்டில் கல்வி யறியாமைக்குக் காரணம் கிராம வாசிகளுக்குத் தக்க கல்வி இல்லாததே.

கிராமவாசிகளுக்குத் தம் தம் கிராமங்களை எந்த விதத்தில் அபிவிருத்தி செய்தால் நாட்டிற்கு நலமுண்டாகும் என்று போதிப்பது நம் கடமையாகும். இது தான் கிராமவாசிகளுக்குத் தகுந்த கல்வி.

கிராமவாசிகள் இன்பமாயும் உற்சாகமாயும் இல்லாததற்குக் காரணமென்ன? பசிப்பிணியும் நோய்ப்பிணியும் தான் "சுத்தம் சோறு போடும்" என்னும் பழமொழியை அனுசரித்து நாம் நம் கிராமங்களை சுத்தமாகவும், நோயற்றதாகவும் வைத்துக் கொண்டால் சோறு தானே வரும். அது எங்ஙனம் என்று கேட்கலாம்.

முதலில் கிராமத்திலுள்ள தெருக்கள் சுத்தமாக விருக்கவேண்டும். இப்பொழுது கிராமவாசிகள் தங்கள் தங்கள் வாசலைச் சாணிபோட்டு மெழுகி வைத்துக் கொள்கிறார்கள். ஆனல் அத்தெரு முழுவதும் சுத்தமா யிருக்கவேண்டும் என்பதைக் கருதுவதே யில்லை. ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தெருவின் மீது சிரத்தை எடுத்துக் கொண்டு அதைத் தினந்தோறும் சுத்தப்படுத்த முயல்வார்களே யானல் தெருவும் சுத்தமாகும், வியாதியும் அதிகம் இரா. அத் தெருவிலிருந்து நீக்கப்பட்ட அசுத்தங்கள் கிராமத்திலுள்ள வயல்களுக்கு நல்ல எருவாக உதவும்.

தெருக்களில் அவ்வப்போது மாடுகளும், எருதுகளும் இடும் சாணத்தை எல்லாம் வாரி கிராமத்திற்கப்பால் கொஞ்ச தூரத்தில் ஓர் அகலமான குழியில் போட்டு வந்தால் கொஞ்ச காலத்தில் அவை நல்ல எருவாகி, கிராம விவசாயத்திற்கு உதவி கிராம வாசிகளின் பசிப்பிணியைத் தீர்க்கும்.

மேலும் கிராமத்திலுள்ள குளங்களிலிருந்து கால்வாய்கள் வெட்டி வயல்களுக்கு நீர் கொண்டு போகலாம். கிராமத்தில் ஓர் இடத்திலும் நீர் தேங்கவிடக் கூடாது. குளங்களிலுள்ள நீர் அசுத்தமாகையால் அதைக் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் உபயோகித்தல் ஆகாது. குடிப்பதற்கும், குளிப்பதற்கும், கிணறுகளை வெட்டி அவைகளின் தண்ணீரை உபயோகிக்க வேண்டும். குளித்த பிறகு தண்ணீரைத் தேங்கவிடாமல் கால்வாய்களின் மூலமாக வயலுக்குக் கொண்டு போகவேண்டும்.

பின்னும், தெருக்களிலும், கண்ட இடங்களிலும் மல ஜலங்களைக் கழிக்கக் கூடாது. கிராமத்திற்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால் சில சாமான்ய கக்கூஸ்கள் ஏற்படுத்தி அவைகளை நன்ருக மறைத்து வைத்தால் அவைகளிலிருந்து துர் நாற்றமும் கிளம்பாது, வியாதியும் பரவாது. மேலும் அப்படி கழிக்கப்பட்ட மலங்கள் பிற்காலத்தில் நல்ல எருவாக உதவும்.

இவ்வாறு சுகாதார முறைகளைக் கையாளுவதால் வியாதிகள் உற்பத்தி யாகாமல் பார்த்துக் கொள்ளலாம். அப்படி உற்பத்தி யானுலும், பரவவொட்டாமல் தடுக்கலாம். பிறகு வயலின் மண் நன்ருகச் செழிப்பாய் விடுவதால் பயிர்கள் நன்ருக விருத்தியடைந்து, பசித்துன்பமும் அற்றுப் போம்.

தற்கால கிராமவாசிகள் கேழ்வரகு சோளம் முதலிய தானியங்களைச் சாப்பிடுவது அநாகரீகமென்று நினைத்து மில்லினுல் அரைக்கப்பட்ட அரிசியைச் சாப்பிடுவதனுல் சக்தியற்று, உழைக்க முடியாமல், இளைத்து,வாடி, வதங்கிப் போகின்ருர்கள். அப்படி யல்லாமல் முன்போல் கைக்குத்தரிசியும், இன்னும் மேற்சொன்ன தானியங்களையும் உண்டு வந்தார்களேயானுல் அவர்கள் திடகாத்திரர்கள் ஆவார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இன்னும் சில கிராமவாசிகள் நாகரீகம் என்ற பெயரை வைத்துக் கொண்டு காபி, தேயிலை முதலியவைகளை, கிளப்புகளிலிருந்து வாங்கிச் சாப்பிடுகின்ருர்கள். கிளப்புகளில் காலையில் போட்ட டிகாக்ஷனை இரவு வரையில் வைத்திருப்பதால் அவை கெட்டுப்போய் விஷமாக மாறிவிடும். அவைகளைச் சாப்பிடுவதனுல் உடம்பு கெட்டுப்போய் பல நோய்களுக்கு இடம் தருகிறது. மற்றும் பலர், கள், சாராயம், முதலியவைகளைக் குடிக்கின்ருர்கள். இவ்வாறு செய்வதனுல் ஈரல்கள் ஒடுங்கி சக்தியற்றுப்போய் பல வியாதிகளுக்கு இடம் தருகின்றன. இப்பழக்கங்களைக் கிராமவாசிகள் அடியோடு ஒழித்தல் வேண்டும்.

இவைகளில் செலவிடும் பணத்தைக் கொண்டு கிராமக் கைத்தொழில்களை விருத்தி செய்தார்களானுல் அவர்களுக்கு உண்ணவும் உடுக்கவும் கஷ்டமே இடையாது.

கிராமக் கைத்தொழில்களில் முக்கியமானது சர்க்கா அல்லது ராட்டை சுற்றுவது. இவ்விதமாக நூல் நூற்பது சிறிய குழந்தை முதல் பெரிய கிழவர் வரையில் எல்லோரும் செய்யக்கூடிய எளிய தொழில் ஆகும். காந்தியடிகள் மேலும் மேலும் இதையேதான் வற்புறுத்திக்கொண் டிருக்கிருர். அவரும் தினம் நூல் நூற்றுக் கொண்டுதான் இருக்கிருர். எல்லாக் கைத்தொழில்களிலும் சிறந்தது இதுவே யாகும்; எல்லாக் கைத்தொழில்களிலும் சுலபமானது இதுவே யாகும். நம் நாட்டிலுள்ள 37 கோடி ஜனங்களுக்கும் உடுக்க உடையளிக்கக்கூடியது இதுவே யாகும். நம் நாட்டிலுள்ள ஏழுலட்சம் கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கு உணவளிப்பது இக் கைத்தொழில்தான். கிராமப் பெண்களும் உற்சாகத்தோடு செய்யும் கைத்தொழில் இதுதான். ராட்டையே ஜனங்களின் சோம்பேறித்தனத்தைப் போக்கடிக்கக் கூடியது. இப்பொழுதே சர்க்காவைக் கைக்கொள்ளுங்கள். கிராமவாசிகள் உற்சாகமா யிருப்பதைக் கண்டால் எல்லோருக்கும் சந்தோஷந்தான்.

கிராமங்களை அழகுபடுத்துதல் நமது அடுத்த கடமையாகும். கிராமத்தில் நுழையும் பொழுதே "ஆகா என்ன அழகு வாய்ந்த பூஞ்சோலை! புஷ்பங்களின் நறுமணம் என்ன! இவ்விடமே தங்கிவிடலாம்போ லிருக்கின்றதே!" என்று சொல்லும்படியிருக்க வேண்டும். சாலை ஓரங்களிலே மரங்களைவைத்து ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்களை ஏற்படுத்தி, கிராமத்தைச் செழிப்புப்படுத்தினுல் கிராமத்தின் சிறப்பைக் கேட்கவும் வேண்டுமோ?

கிராமச்சிறுவர்களுக்குக் கல்வி இல்லாததனுல்தானே அவர்கள் பூஞ்சோலைகளை நாசம் செய்கிருர்கள்?

கிராம வாசிகளில் அநேகம் பேர் எண்ணெழுத்து வாசனை அறியாதவர்களாயிருக்கின்றார்கள். உலகப் போக்கோ, நாட்டுப் போக்கோ, அவர்களுக்குச் சிறிதேனும் தெரிவதில்லை. அவ்வாறல்லாமல் கிராமச் சிறுவர்களுக்கும், கல்வியில்லாத பெரியவர்களுக்கும் கல்விபுகட்ட ஆங்காங்கே தகுந்த நல்ல பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி கிராமத்தையும், வீடுகளையும் சரிவர பாதுகாக்கும் வழிகளைக் கற்பிக்க வேண்டும் உலகத்தில் அவ்வப்போது நடக்கும் சமாசாரங்களைப் பத்திரிகை மூலமாகவோ அல்லது ஆகாசவாணி மூலமாகவோ அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அவர்களுக்கு ஒரு தேச உணர்ச்சி உண்டாக்கி தன்னலங் கருதாது தேசத்திற்காக உழைக்கச் செய்ய வேண்டும்.

கிராமங்களில்தான் ஜாதிமத வித்தியாசங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளை அறவே யொழித்தல் வேண்டும். கிராமவாசிகளிட மிருக்கும் அடிமையுணர்ச்சியை அடியோடழித்து, தாங்கள் உலக சமுதாயத்திலுள்ள எல்லோருக்கும் சமமான அந்தஸ்து உடையவர்கள் என்ற உணர்ச்சி அவர்களுக்குப் புகட்டவேண்டும்.

இவ்வாறு சுயநலம் பாராட்டாமல், படித்துவிட்டு வேலையின்றிருப்பவர்கள் நம் கிராமவாசிகளை நம் சகோதரர்களாகப் பாவித்து அவர்களுக்குக் கல்வி புகட்டி கிராமங்களைச் சீர் திருத்துவார்களானல் சுதந்திரம் சீக்கிரம் வந்துவிடும் என்பதில் சந்தேகமுண்டா?

"சுபம்"

---




வாஹினி சுமங்கலியில்—ஒரு காட்சி

# காதலற்ற காதல்

(S. சங்கரன்)

[குறிப்பு: ஸாதாரணமாக நாவல்களிலும் கதைகளிலும் வருவதைப் போல் 'ஒரு அபாக்கியவா'னின் உடைந்த ஹ்ருதயத்தின் பரிதாபகரமான கற்பனையையல்ல நான் இப்பொழுது எழுதப் போவது. ஆனால் காதல் என்ற வார்த்தையின் பொருள்கூடத் தெரியாத ஒரு பரிசுத்த ஹ்ருதயத்தின் நினைவுகளையே இங்கே தரப்போகிறேன். நாம் நினைக்கிறபடி, புத்தகங்களில் படிக்கிறபடி குற்றமற்றதான தோற்றத்தையளிக்கும் 'காதல்' பைசாசத்தின் உண்மை ஸ்வரூபத்தை ஒரு குழந்தை உள்ளத்தின் மூலமாக நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். அவ்வளவுதான்.]

அன்று எனக்குப் பொழுதே போகவில்லை. எதைப் பார்த்தாலும் சூன்யம் நிரம்பியிருந்தது. ஏதோ கூற முடியாத ஒரு அவஸ்தையினால் தூண்டப்பட்டு என் நண்பனின் வீட்டை அடைந்தேன். அவன் அங்கே இல்லை. ஆனால் அறை திறந்திருந்தது. ஒரு மேஜையின் ட்ராயரில் பாதி உடம்பை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு ஒரு சிறிய நோட்புஸ்தகம் இருந்தது. சதா சேஷ்டை செய்து கொண்டிருக்கும் என் கைகள் அதை எடுத்து பக்கங்களைத் தள்ளின. அந்தத் தாள்களில் பின்வரும் விஷயங்கள் காணப்பட்டன.

* * * *

**** நான் இதற்கு முன் டயரி எழுதினதே கிடையாது. ஆனால் 'எல்லாரும் எழுதுகிறார்களே, நாம் மட்டும் ஏன் எழுதக்கூடாது?' என்ற பொறாமை மட்டும் நிறைய இருக்கிறது. இந்த வருஷம் எப்படியாவது எழுதவேண்டும். வருஷ முடிவில் நானே அதைப் படித்து ப்ரமித்து ஆச்சரியப்பட்டு மலைத்து விடும்படியான நடையில் அதை எழுத வேண்டும்.

ஆனால், எதை எழுதுவது? சீ! சீ! என்ன வாழ்வு? ஒரு மனிதனின் ஆயுளில் காப்பி சாப்பிடுவது, தூங்குவது, ஸினிமா பார்ப்பது இவைகளைத் தவிர குறிப்பிடத் தக்க ஸம்பவம் ஒன்றுகூட நிகழ்வதில்லையா? ஆனால் இந்த எழுத்தாளர்களுக்கு மட்டும் எங்கிருந்து விஷயம் அகப்படுகிறதோ தெரியவில்லை. பக்கம் பக்கமாக வரைந்து தள்ளிவிடுகிறார்கள். கடவுளுக்குத்தான் வெளிச்சம், அவர்கள் என்ன எழுதுகிறார்களென்று!

இன்று ஒரு புஸ்தகத்தைப் படித்தேன். காதல் என்று எதைப்பற்றியோ பிரமாதமாக போட்டிருந்தது. காதல் என்றால் என்ன? இதற்குப் பதிலைத் தவிர வேறு என்னவெல்லாமோ எழுதியிருக்கிறார், அந்த ஆசிரியர். நமக்கு எது சந்தேகமோ அதுதான் அவருக்கும் ஸந்தேகம்போலிருக்கிறது. என்னைக் கேட்டால் நான் இப்படித்தான் சொல்லுவேன். "காதல் என்றால், உலகத்தில் ஒருத்தருக்கே தெரியாததும், ஆனால் எல்லோரும் தெரிந்தது போல் காட்டிக் கொள்வதும், ஆதியும் அந்தமுமில்லாமல் எங்கணும் பெரு வழக்காய்......இத்யாதி...... இத்யாதி............ அட பைத்தியக்காரக் காதலே.

*** இன்று நான் தெருவில் போய்க்கொண்டேயிருந்தேன். எதிரே எத்தனை விதமான பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள். நாகரிகத்தின் ஆரம்பம், நடுத்தரம், கடைசிநிலை, ஆகிய பல ரகப்பட்ட பெண்மணிகள், இவர்களைப் பார்த்தால் சிரிப்பு சிரிப்பாக வருகிறது. ஒரே யடியில் சுருண்டு விழக்கூடிய வைக்கோல் பொம்மைகள். ஆனால் அவர்கள் சக்தி எத்தகையது! பெரிய பெரிய பயில்

வானைக்கூட அவர்கள் பைத்தியமாக்கி விடுகிறார்கள். இந்த நோஞ்சான் ஸ்வரூபங்களுக்காக எத்தனை கொலைகள், எவ்வளவு பாவங்கள் தினே தினே நடக்கின்றன. சில சமயங்களில் நான் நினைப்பதுண்டு, ஸ்திரீகளுக்காக சகலத்தையும் தியாகம் செய்து உயிரைக்கூட விடத்தயாராயிருக்கிறார்களே இந்த மனிதர்கள், இவர்கள் மூளையில் ஒரு திருகாணி தளர்ந்திருக்கிறதா என்று.

நேற்று சண்பகம் வீட்டிற்குத் தன்னுடன் ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தாள். என்னைக் கண்டதும் அவள் சட்டென்று அம்மாவிடம் அடுக்களைக்குப் போய்விட்டாள். போகும் போது என்னைக்கூட ஒருவிதமாக பார்த்து விட்டுப்போனளென்று நினைக்கிறேன். அட பாவமே! நானென்ன பேயா, பிசாசா? அவளை விழுங்கி விடுவேனா? ஆனால் நான்கூட அவளை அந்தமாதிரி பார்த்தேன்போலிருக்கு. என்? சி! சி! மனஸே ஸரியில்லை. அடிக்கடி அன்றைக்கு எனக்கு தாகமெடுத்தது. உண்மையாகவா என்று கூட ஞாபகமில்லை. சுமார் 10 தடவை அடுக்களைக்குச் சென்று தண்ணீர் குடித்திருப்பேன். எனக்குக்கூடத் தெரியவில்லை ஏன் போனேனென்று. ஆம், அந்தப் பெண்ணைப் பார்க்கக் கூடத்தான் போனேன், அவள் பெயரென்ன?......... சண்பகம் சொன்னாள் மீனுக்ஷி என்று, அட ராமா! என்னவாயிருந்தால், எனக்கென்ன; மீனுக்ஷி! பெயர் நன்றாகத்தானிருக்கிறது. நீல நிறச் சிற்றாடை, ரோஸ் ஜாக்கெட் கையில் நாலு வளை. தலையில் கனகாம்பரம். கடவுளே! அவள் எப்படியிருந்தால் எனக்கென்ன? என்ன தாவணி போட்டுக்கொண்டிருந்தால் எனக்கென்ன? தெருவில் போகும் ஆயிரம் பெண்களுள் அவள் ஒருத்தி. அப்பப்பா! ஸ்த்ரீகளே கொடிய விஷப்பாம்புகள். ஆனால் மீனுக்ஷியைத் தவிர. மீனுக்ஷி! மீனுக்ஷி!! அவள் எந்த வீட்டில் வசிக்கிறாளோ!

மறந்து விட்டேனே! இன்று இன்னொரு புஸ்தகம் படித்தேன். அதில்கூட காதலைப்பற்றி என்னவெல்லாமோ உளறியிருந்தது.

எனக்கு இன்று வெளியே போக வேண்டுமென்றே தோன்றவில்லை. தினமும் ஐந்து மணிக்கு வீட்டை விட்டு ஓடும் கால்கள் இன்று வீட்டில் நிம்மதியாக இருக்க விழைகின்றன. 'பீச்' என்ன வேண்டியிருக்கிறது. வீட்டில் உட்கார்ந்து கொண்டு நல்ல நாவல்களைப் படிப்பதை விட்டு விட்டு! 'மணி எப்பொழுதுதான் ஆறடிக்கப்போகிறதோ'......இந்த ஷர்ட் அவ்வளவு எடுப்பாக இல்லை. ஸில்க் ஜிப்பா எனக்கு நன்றாக இருக்கும்போல் தோன்றுகிறதே! வீட்டிலிருக்கும் பொழுது அந்த ஸில்க் ஜிப்பாதான் போட்டுக்கொள்ள வேண்டுமா?......என்னமோ! இன்றைக்குத்தான் போட்டுக்கொள்வோமே. இந்த கெடியாரம் ரொம்ப மெதுவாகத்தான் போகிறது! மணி 5½ தானா! ஆம். அதோ வந்துவிட்டாள் அவள். ஜில் ஜில் என்று கால் கொலுஸு சப்திக்க. எவள்? நான் யாருக்காகவாவது காத்துக் கொண்டிருந்தேனா?

மீனுக்ஷி வந்துவிட்டாள். இன்றும் அப்படியே பார்த்துக்கொண்டு போனாள். அதன் அர்த்தந்தான் என்னமோ! அவளைத் தொடர்ந்து நானும் செல்ல வேண்டுமென்பதா? எனக்குத் தெரியாது. ஆனால் மகுடியின் வசமகப்பட்ட பாம்பைப்போல் அடுக்களைக்குச் சென்றேன். என்னைக் கண்டதும் அம்மா கூறினாள் "அடே! மீனுக்ஷிக்கு அந்தப் புதுப்பாட்டை எழுதிக்கொடு" என்றாள். அம்மா எவ்வளவு நல்லவள்? என்னவானாலும் தாயின் அன்பு அலாதிதான்! உடனே மாடிக்கு ஓடினேன். எங்கே, அம்மா வேண்டாம் என்று சொல்லிவிடப்போகிறாளோ என்ற பயத்துடன். அவளும் வந்தாள் தயங்கிக்கொண்டே.

சுமார் ஒரு மணி நேரமாகுமா ஒரு சிறிய பாட்டை எழுதுவதற்கு! அடடா! அனுபல்லவி என்று போடுவதற்குப்பதிலாக மீனுக்ஷி என்று போட்டுவிட்டேன். என்ன மூடத்தனம்! அவள் உடனே சிரித்து விட்டாள். எப்படி? தந்தம் போன்ற பல் வரிசையை பாதி வெளியில் காட்டிக்கொண்டு, ரோஜாப்பூவைப் போன்ற கன்னங்களில் ஒரு குழிவை

உண்டாக்கிக்கொண்டு, அவள் எப்பொழுதும் சிரித்துக்கொண்டேயிருக்கக் கூடாதா?

இன்று சீக்கிரம் போய்விட்டாள். எல்லாம் அந்தக் கழுதை சண்பகத்தினால் தான். நாழிகை யாகிவிட்டதாம்! வீட்டில் தேடுவார்களாம்! இந்தச் சிறுக்கியை யார் அப்படிச் சொல்லச் சொன்னது?

*** ஒருமட்டுக்கும் கண்டு பிடித்து விட்டேன் அவள்......தெருவில் வசிக்கிறாளென்பதை. ஆனால் நம்பர் தெரியாது. இன்று மட்டும் நன்றாக ட்ரஸ் செய்து கொண்டு, ஸைகிளில் சுமார் இருபத்தைந்து தடவை அந்தத் தெருப் பக்கம் போயிருப்பேன். எனக்கென்ன வேறு வேலை கிடையாதா! பிரின்ஸிபால் ஐந்து மணிக்கு வரச் சொன்னாரே! எல்லாம் காலையில் பார்த்துக்கொள்ளலாம். ஒன்றும் குடி முழுகிப்போய் விடாது.

அந்த சிரிப்பின் சப்தம் அவளுடையதுதான். இந்தப் பேசும் ஸ்வர்ண விக்ரகத்தை ஈசன் ஏன்தான் படைத்தானோ? அவருக்கே தெரியாது போலும்! இன்று செய்த ஒரு காரியத்தை நினைத்தால் வெட்கமாயிருக்கிறது. அவள் போன பிறகு, கீழே கிடந்த—அவள் கைப்பட எழுதின—ஒரு துண்டு கடுதாசியை எடுத்து ரொம்ப பத்திரமாகப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொண்டேன். ஏனென்று தெரியாது!

இதுவரை எழுதினதை இப்பொழுதுதான் படித்துப் பார்க்கிறேன். மள மளவென்று ஏறிவிட்டு லைட் ஹவுஸின் (Light house) உச்சியிலிருந்து கீழே பார்க்கும் பட்டிக்காட்டானைப் போல் சென்றுபோன நிகழ்ச்சிகளை நோக்குகிறேன். எனக்கு பயமாயிருக்கிறது. ஹ்ருதயம் முன்னைவிட வேகமாக அடித்துக் கொள்கிறது. 'மீனாக்ஷி' என்று ஒரு தரம் கூறும்போதும் நினைக்கும்போதும் உடம்பு முழுவதும் மின்சாரம் பாய்வது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. வயிற்றை என்னமோ செய்கிறது. என்னவென்று சொல்ல முடியவில்லை. மனம் இரு பாதியாகப் பிளந்து விட்டது. ஒரு பாதி அவளை எண்ணி எண்ணி ஆனந்தப் படுகிறது. மற்றொரு பாதி புண்ணாகி நொந்து சுண்ணாம்புக்காளவாயாக நீறுகிறது. இந்த மாறுபட்ட உணர்ச்சிகள் ஒன்று சேர்ந்து "என்னை" என்னவோ செய்கின்றன.

முதன் முதலில் நான் யார்? ஸ்த்ரீகளைக் கண்டால் வெறுக்கும் என் இரும்பு மனம் மீனாக்ஷியின் விஷயத்தில் பாகாயுருகி விடுகிறது. அவர்களை விஷ ஸர்ப்பமென்று தூற்றும் அதே நாக்கு மாந்தளிர் என்று இவளை வர்ணிக்கிறது மீனாக்ஷி! மீனாக்ஷி! என் ஸுக துக்கங்களில், என் எதிர்கால வாழ்க்கைத் திட்டங்களில், சுருங்கக் கூறினால் என் ஸகலத்திலும் புகுந்து பூகம்பங்களை விளைவித்துக்கொண்டிருக்க இந்த "பாவாடை கட்டின" உடம்புக்கு என்ன தைரியம்? கடவுளே! இப்படி நான் ஏன் புழுங்கிப் புழுங்கிச் சாகிறேன்.

என் நிம்மதியைக் குலைக்கவந்த இந்த மாயக் கள்ளியை என் ஹ்ருதயம் எவ்வளவு தாகத்துடன் விரும்புகிறது? என் இந்த பரிதாபகரமான நிலைமை அவளுக்குத் தெரியுமா? அவளும் என்னைப் போல் துடிக்கிறாளா? எனக்குப் பதிலளிப்பார் யாருமில்லையா?

ஒரு வாரத்திற்கு முன்னால் நான் எப்படி யிருந்தேன். இப்பொழுது எப்படியிருக்கிறேன். அடுத்த வாரம் எப்படியிருப்பேனோ! எனக்கு நன்றாகத் தெரியும் இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டு நான் அதிக நாட்கள் இருக்க மாட்டேனென்று. என் ரஹஸ்யங்கள், என் குமுறல்கள், என் கொந்தளிப்புகள், என் பூத உடலுடன் எரிந்து அழிந்து போய்விடும். ஆனால் அந்த கல் வெட்டு போன்ற மீனாக்ஷியின் உருவம் அப்பொழுதாவது என்னை நிம்மதியாக விடுமா? என் வெந்த அஸ்திகளின் மேலும் நீர்த்த சாம்பலின் மேலும் அது கோர நர்த்தனம் புரியும். தோன்றித் தோன்றி என்னை பழுக்கப் பழுக்க வாட்டும். நான் அழிவேன், அவள் அழிவாள். ஆனால், என் ஏக்கமும் அவள் மானஸீக உருவமும் ஒரு நாளும் மடியாது. அது எப்பொழுதும் மீனாக்ஷி, மீனாக்ஷி! என்று

புலம்பும். அந்த உருவத்தைக் கற்பனை பண்ணிப்பண்ணிக்கலங்கும். கடவுளே! ஆனந்தமாக ஆரம்பித்த என் டயரி இப்படியா முடிய வேண்டும்?....... கடைசியில் இதற்குத்தான் காதலென்று பெயரா? சீ! சீ! என்ன மடையன் நான், இந்த கோர பைசாச களேபரம் காதலல்ல. காதல் ஏதோ ஒரு தெய்வீக உணர்ச்சியாக இருக்க வேண்டும்......கடைசியில் மரணம் தான்...........

மாடிப்படியில் காலடிச்சப்தம் கேட்டது. என் நண்பன் வந்துகொண்டிருந்தான். நான் முகத்தை ஜன்னல் பக்கமாக திருப்பிக்கொண்டேன். நான் அந்த டயரியைப் படித்து விட்டதை அவன் கண்டுவிட்டான் போலிருக்கிறது. ஒரு உதறல்! ஒரு நொடிப்பு! எல்லாம் ஒரே ஒரு நிமிஷம் தான். பிறகு ஒருவாறு சிரித்துக்கொண்டு "சங்கரா! அந்தக் கதையைப் படித்தாயா? உனக்குத்தான் எத்தனையோ பத்திரிகாசிரியர்களைத் தெரியுமே! யாரிடமாவது கொடுத்துப் போடச்சொல்லேன்" என்றார். அந்த வார்த்தைகள் எப்படி வெளிப்பட்டன வென்று நான் அறியேன். கொடிய நாகப்பாம்பின் விஷம் கலந்த க்ஷீரத்தின்மேல் மெதுவாக அலையும் நுரையைப்போல்! மரண மாத்திரையை மூடியிருக்கும் தங்க ரேக்கைப்போல்! நான் கூறினேன், "ஆகட்டும். ஆனால் ஒரு நிபந்தனை. நீ தற்கொலை செய்துகொள்வதில்லை யென்று சத்தியம்செய்து தரவேண்டும். அப்பா! வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் இறங்கி ஏறி அடிபட்டவர்களில் நானும் ஒருவன். என்னை ஏமாற்றாதே."

அவன் முகத்தில் அசடு வழிந்தது. நான் ஜன்னல்வழியாகத் திறந்த வெளியை விறைத்துப் பார்த்தேன்.

---

# ஒரு ஜப்பானிய கவி

## பசுமை பச்சிலை

யமகதாகி மகேரு ஒளனு மோகிபி பிதோ தோ
தோமோ நிஷி திசுமியா தவஷிகுமோ அருகா.
காணப்படுவதோ வெறும் பச்சிலை
அது விளையு மிடமோ சிறு மலை
கிபி நாட்டுப் பெண்ணுடன் பறித்தால்
என் களைப்பு மறைகிறது களிப்பால்.
நின்டோகு மன்னர்.

நின்டோகு சக்கரவர்த்தி கி. பி. 313 லிருந்து 399 வரை ஜப்பானில் வாழ்ந்தவராவர். அன்னாரின் காமக்கிழத்தி கிபி மாகாணத் தலைவரின் மகள் குரோ இளவரசி. அரசன் தன்னிடம் காட்டும் பரிவைக்கண்டு ராணி பொறாமை கொள்ளலாமென்று அஞ்சி குரோ தன் நாடு சென்றுவிட்டாள். வேந்தனுக்கு அவளை விட்டுத் தனித்திருக்க முடியவில்லை. எனவே தாமே நேரில் மலைச்சாரலிலுள்ள அவள் இல்லத்தை நாடினர். இளவரசி அவரைக் கண்டு மகிழ் வெய்தி அச்சமயத்தில் கிடைத்த சில கீரைகளையும், கிழங்குகளையும் கொண்டு உணவு தயாரித்தாள். அது காலை அவளுக்கு உதவியாக மலைப் பிரதேசத்தில் அரசர் கல்லுக்கும் முள்ளுக்கும் இடையிலிருந்த கீரைகளை மிகுந்த சிரமத்துடன் பறித்து உதவிய போது அவள் உணவால் தன் களைப்பை மறந்து இன்பத்துடன் பாடியது இக் கவி.

த. கிருஷ்ணமூர்த்தி.

# திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயில்கள்

எல். என். குபீல் சுந்தரேசன்

குகைக் கோயில்கள், பண்டைக்காலச் சிற்பத் தொழிலின் மேன்மையைக் குறிப்பிடும் சிறந்த சின்னங்கள் என்று சொல்லலாம். முதன் முதலில், கற்களைச் செதுக்கும் சிற்பத் தொழில் ஆரம்பிப்பதற்கு முன் களிமண்ணினால் உருவங்கள் செய்யப்பட்டன. பின்னர் மரக்கட்டைகளில் செதுக்கினர். பூரிஜகன்னாதம் ஆலயத்தில் உள்ள விக்ரகமும் மரத்தில் செதுக்கியதே யாகும். பின்னர் செங்கற்களையும் சுண்ணும்பையும் கலந்து உருவங்களைச் செய்து வந்தனர். உதாரணமாக, திருவரங்கம் பெரிய கோயிலில் அமைந்துள்ள திருவரங்கநாதனின் உருவமும் அவ்வாறு அமைந்ததே. இறுதியில் கருங்கற்களில் உருவங்கள் செதுக்கலாயினர். இந்நிலை பல்லவ அரசர் காலத்தில்தான் உயர் நிலையுற்றது. கி. பி. 18-ம் நூற்றுண்டில் ஆண்டு வந்த மகேந்திரபல்லவ மன்னன் காலத்தில்தான் பற்பல விடங்களில் குகைக் கோவில்கள் வேரூன்றலாயின. இக்காலத்தில்தான் திரிசிரா மலையின் மேலும் கீழும் உள்ள இரு குகைக் கோயில்கள் உண்டாயின. இவ்விரண்டும் பல்லவரது நாகரீகத்தையும் சிற்பத்திறனையும் தெளிவாக காட்டுகின்றன.

திரிசிரா மலையில் உள்ள மேல்குகைக் கோயில் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வழியில் இடது புறத்தே அமைந்துள்ளது. கி. பி. 600 முதல் 625-வரை தென்னட்டை ஆண்டுவந்த மகேந்திர விக்ரமவர்மப்பல்லவ மன்னனது முயற்சியால் அமைந்தது இக்குகைக் கோயில். இக் குகைக்கோயிலினுள் நான்கு பெரிய தூண்கள் குடையப்பட்டுள்ளன. அதற்குள் ஒரு சிறிய ஆலயமும் குடையப் பெற்றுள்ளது. அவ்வாலயத்தின்முன் இரு துவாரபாலகர்களது வடிவம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் எதிர்ச்சுவரில் தாண்டவம் புரியும் சிவபெருமான் உருவமும், நான்கு முனிவர்கள், இரு கந்தருவர்கள் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் தனது நான்கு கரங்களுள் ஒன்று கங்கையைத் தாங்கவும், ஒன்று மலரேந்தி யிருக்கவும், ஒன்று நாகத்தைத் தாங்கி யிருக்கவும், ஒன்று இடையில் பொருந்தி யிருக்கவும் அமைந்துள்ளன. திருவடிகளுள் ஒன்று ஓர் அரக்கனை அழுத்தி நிற்கவும், மற்றொன்று தனித்து நிற்கவும் அமைந்துள்ளன. முனிவர்கள் சிவபெருமான் முன் வணங்கித் துதிக்க கந்தர்வர்கள் பாடி நிற்கின்றனர். மேற்குறித்த சில உருவங்களின் தோற்றம் பார்ப்பதற்கு வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி ஆங்கிலேயர் வசமானதும் இக் குகைக்கோயில்களை அவர்கள் வெடி மருந்து சேமித்து வைக்கு மிடமாக உபயோகித்து வந்தனர் என்பதற்கு அங்கு காணப்படும் சிறு சிறு குழிகளே சான்றாகும். இக்கோயில்களின் சுவர்களிலும் தூண்களிலும் தமிழ், சம்ஸ்கிருதமாகிய இரு மொழிகளிலும் சில லிகிதங்கள் வரையப்பட்டுள்ளன. அவை சுமார் 104 தமிழ்ச் செய்யுட்களும் சில சம்ஸ்கிருத ஸ்லோகங்களுமே யாகும். இவ்வாலயத்தின் முன்னர் ஓர் சிவ லிங்கமும், மகேந்திரவர்மனது உருவச் சிலையும் இருந்ததாகத் தெரிகின்றது. இப்பொழுது அவ்வுருவச் சிலைகள் அங்கே காணப்படவில்லை. ஆனல் அவைகள் பொருந்தி யிருந்த பீடங்கள் மட்டிலும் காணப்படுகின்றன. சுவர்களில் மகேந்திர வர்மனின் பற்பல சிறப்புப் பெயர்களும் பட்டப் பெயர்களும் வரையப் பட்டுள்ளன.

மலைக்கோயிலுக்குச் செல்லும் வாசலுக்கு மேல்பால் சிறிது தூரத்தில் மலையடி வாரத்தில் மற்றொரு குகைக்கோயில் உள்ளது. இதுவும் திருசிரா மலையின் பாறையில் குடையப்பட்டுள்ளதாகும். இக் குகைக்கோயிலின் வடபக்கத்தில் தெற்கு முகமாக ஐந்து உருவங்கள் ஒரு கூட்டமாக இருக்கின்றன. அவை, கணேசர், சிவன், துர்க்கை, சூரியன், பிரம்மா முதலியாது

ஐவரது உருவங்கள். இவைகள் யாவும் மகாபலிபுரத்தில் அமைந்துள்ள சிலைகளின் வேலைப்பாடுகள்போன்றவை அல்ல.


இக்கோயிலின் மேற்குப்புறத்தில் ஒரு கர்ப்பக்கிரகம் அமைந்துள்ளது. அதன் இருபுறங்களிலும் துவாரபாலகர்களின் இரு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிழக்குப்புறத்திலுள்ள ஆலயத்தில் திருமாலின் உருவம் அமைந்துள்ளது. மேற்குப்புறத்தில் உள்ளது காலியாக இருக்கின்றது. இக் குகைக்கோயிலிலும் ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. பல்லவர்கள் குகைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள விக்ரகங்களின் மிக முக்கியமானது கணேசரது உருவமேயாகும். இங்குச் சில தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை மேல் கோயில் உள்ளவைபோல அவ்வளவு வேலைப்பாடுகளுடன் கூடியவையல்ல. இக்கோயிலில் அமைந்துள்ள உருவங்களின் தோற்றம் உள்ளத்தைக் கவர்வனவாய் அமைந்ததாயுள்ளன. இதனை அனைவரும் பார்த்து மகிழ்வது சிறந்ததாகும்.

இக் கீழ்க்கோயில் மேல்கோயிலைவிட காலத்தால் பிந்தியது என்று தெரிகின்றது. மேலும் இது முழுதும் முடிவு பெறாத தொன்றாகவும் தோற்றுகின்றது.

இங்குள்ள தூண்கள் ஒன்றில் மூவரது கையெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்களின் உருவ அமைப்பைக்கொண்டு இக்கோயில் 13ம் நூற்றாண்டில் உண்டாயிருக்கவேண்டுமென்று ஊகிப்பதற்கு இடமாகின்றது. அத்தூணில் உள்ள கையெழுத்து யாருடையதாக இருக்கலாம் என்பது இன்னும் அறியக்கூடவில்லை.

இவ்விரு கோவில்களிலும் உள்ள கல்வெட்டுக்கள் மகேந்திரப் பல்லவனை அப்பர் ஸ்வாமிகள் ஜைனமதத்தினின்று சைவமதத்திற்கு மாற்றிய திறத்தையே குறிப்பிடுகின்றன. இவ்விரு கோவில்களும் உலக யாத்ரீகர்களாலும் புராதனப் பொருள்களை ஆராய்வோராலும் பெரிதும் கொண்டாடப்படுகின்றது. இவ்விருகுகைக் கோயில்களும் பல்லவ மன்னர்களது உயரிய நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாக நிற்கின்றன.

நிற்க, சமீபமாக வெளிவந்த புராதனப் பொருளாராய்ச்சித் துறையினரது குறிப்பின்படி மற்றுமொரு குகைக்கோயில் இங்கு இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அது இன்னும் பொது மக்களால் கண்டுபிடிக்கப்படவில்லை.






# பணப்பேய்

(எஸ். ஸோமாஸ்கந்தன், பேரம்பூர்)

“ அம்மா, மீனாக்ஷி, எனக்கு நோயின் துன்பம் வர வர அதிகரிக்கிறது! தாங்க முடியவில்லை. டாக்டரும்—‘இனி மருந்தினால் பயனில்லை—’ என்று கூறிவிட்டார். உன்னை என் உயிருக்கு மேலாக மதித்து வளர்த்துவந்தேன்! நான் இப்பொழுது உன்னை விட்டுப் போகிறேன்! என் சொத்துக்களை யெல்லாம் உனக்கும் உன் புருஷனுக்குமாக எழுதிவைத்து விடுகிறேன்! இனி நான் பிழைக்கமாட்டேன்! நான் இறந்துபோவதற்காக வருந்தாதே! உன் தாயாரை அன்புடன் ஆதரித்துவா! இதோ, நான் எழுதியிருக்கும் மரண சாசனம்! கவலைப் படாதே!”——என்றார் கண்ணாயிரம் பிள்ளை படுக்கையில் படுத்து முனகிக் கொண்டே.

* * *

கண்ணாயிரம் பிள்ளை பெரிய தனவந்தரல்லர்; ஆனால் அன்ன வஸ்திரத்துக்குக் குறைவில்லாமல் அவருக்குச் சில நிலங்கள், வீடுகள் முதலிய பூஸ்திதிகள் இருந்தன. அவருக்கு மீனாக்ஷியைத் தவிர வேறு சந்ததி கிடையாது. மீனாக்ஷிக்குத் தக்க வயது வந்ததும் ஒரு தகுந்த புருஷனைத்தேடி மணம் செய்து வைத்தார்.

* * *

இரண்டு வருஷங்கள் உருண்டோடி மறைந்தன. கண்ணாயிரம் பிள்ளையைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்த கொடிய க்ஷயரோகம் அவரை விட்டு விலகியது! முற்றிலும் குணமடைந்து தெய்வகதியாகப் பிழைத்துக் கொண்டார்.

* * *

ஒருவனைப் பணப்பேய் பிடித்துக் கொண்டால் அது அவனைச்சும்மா விடுமா? அந்தப் பணப்பேய் மீனாக்ஷியையும் பிடித்துக் கொண்டது. அது கண்ணாயிரம் பிள்ளையையும் அவர் மனைவியையும் அன்னமிட்டு ஆதரிக்க இடந்தர வில்லை. அதனால் அவர்கள் கண்ணாயிரம் பிள்ளையையும் அவர் மனைவியையும் பலவிதமான கொடுமைக் குள்ளாக்கினர்.

கண்ணாயிரம் பிள்ளை மறுபடியும் தம்முடைய சொத்துக்களையடைய பகீரதப்ரயத்தனம் செய்தும் பயன்பட வில்லை. அவர் எழுதி வைத்த மரண சாசனமே அவருக்கு விரோதமாயிற்று. அப்பால் அவரும் அவர் மனைவியும் அன்ன வஸ்திரத்துக்குக் கூட வழியில்லாமல் மிகவுந் துன்பப் பட்டார்கள்.

கண்ணாயிரம் பிள்ளை யோக்கிய ரென்பது அவர் மருமகனை நம்பி மோசம் போனதும் எல்லோருக்கும் தெரியுமாதலால், அவருக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்று பலர் நினைத்தனர். ஆனால் கண்ணாயிரம் பிள்ளைக்கு அது சம்மதமில்லை. தேகத்தில் சக்தியுள்ள வரையில் உழைத்து ஜீவிக்க வேண்டுமே தவிர, யாசகம் செய்வது இழிவு என்பது அவர் அபிப்பிராயம். ஆகையினால் அவர் ஒருவருடைய உதவியையும் விரும்பவில்லை, தமது ஆப்த நண்பரொருவரிடத்தில் கொஞ்சம் பணம் கடன் வாங்கி, அவர் வீட்டிலேயே குடியிருந்துகொண்டு வியாபாரம் செய்து வாழ்கையை நடத்தி வந்தார்.

* * *

“ பிள்ளையவர்களே, நான் ஒரு பெரிய பெட்டியில் நாலாயிரம் ரூபாய் வைத்துப் பூட்டி உம்மிடம் கொடுத்துவிடுகிறேன்!

நாளைய தினம் உமக்கு அறுபது வயது முடிகிறதல்லவா? சஷ்டி அப்தபூர்த்தி சாந்தி நடத்தப் போவதாக உமது மகளுக்கும் மருமகனுக்கும் சொல்லி யனுப்புங்கள்! அவர்கள் அவசியம் வருவார்கள். நானும் என் நண்பருடன் வந்து விடுகிறேன். நாங்கள் உங்களைக் கடன் கேட்கிறோம். நீங்கள் கடன் கொடுப்பது போல் பாவனை பண்ணி எங்கள் பணத்தை எங்களிடமே கொடுத்து விடுங்கள்! இதைப்பார்த்தவுடன் உமது மகளும் மருமகனும் உங்கள் தயவைச் சம்பாதிக்கப் பாடுபடுவார்கள் அந்தச் சமயத்தில் அவர்களிடத்தில் இருக்கும் மாண சாசனத்தைக் கைப்பற்றிக்கொள்ளலாம்"—என்று கண்ணுயிரம் பிள்ளையிடத்தில் அவர் நண்பர் கூறினர்.

கண்ணுயிரம் பிள்ளையின் நண்பர் பரம தயாள குண சீலர்; பிறர் துன்பங்கண்டு சகிக்க மாட்டார். அவர், கண்ணுயிரம் பிள்ளை இழந்த சொத்துக்களை மீண்டும் அவர் பெறும்படி, இவ்வுபாயத்தைச் செய்தார்.

* * *

மீனுக்ஷியும் அவள் புருஷனும் ஆச்சரிய மடைந்தனர்.

"அப்பாவுக்கு சஷ்டி அப்த பூர்த்திக் கொண்டாட்டமாமே? இதோ அழைப்புக் கடிதம் வந்திருக்கிறது! கையில் பணமில்லாமல் அவர் என்ன செய்வார்? இது பெரிய ஆச்சரியமாக வல்லவா இருக்கிறது!"—என்றான் மீனுக்ஷியின் கணவன்.

மீனுக்ஷி—"அதையும் தான் போய்ப் பார்ப்போமே!"—என்றாள்.

* * *

முன்னமே நடந்த ஏற்பாட்டின்படி கண்ணுயிரம் பிள்ளையின் நண்பரும் அவருடன் வந்தவரும் கடன் கேட்டனர் கண்ணுயிரம் பிள்ளை நாலாயிரம் ரூபாயையும் கலகல வென்று கொட்டினர். இதைக் கண்ட மீனுக்ஷியும் அவள் புருஷனும் திகைத்து நின்று விட்டனர்.

"ஒரு நிமிஷத்தில் நாலாயிரம் ரூபாய் கடன் கொடுப்பாரானல் இன்னும் இவருக்கு எவ்வளவு சொத்திருக்கவேண்டும்! தம்முடைய சொத்தை இவர் நமக்கு முழுவதும் எழுதிவைக்கவில்லை. இதை நாம் அறியாமற் போனேம்!"— என்று பெருமூச்சு விட்டனர்.

* * *

"அப்பா, எங்களுடைய வாழ்வுகளெல்லாம் உங்களால் வந்த வாழ்வுதானே! நீங்கள் கிருபை செய்யாவிட்டால் நாங்கள் இவ்வளவு நாட்கள் உயிர்வாழ்வதேது? நீங்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்ட நாள் முதல் எங்களுக்கு அன்ன ஆகாரமில்லை" —என்று பலவிதமாக ஸ்தோத்திரம் செய்து தந்தைக்குத் தூபம் போட்டாள் மீனுக்ஷி.

இவ்வளவும் பணப்பேய் செய்கிற திருக்கூத்து என்பதைக் கண்ணுயிரம், பிள்ளை யறிந்துகொண்டு, "அம்மா, விசனப் படாதே! உனக்கு ஏதாவது வேண்டுமானல் தெரிவி!" என்றார்.

மீனுக்ஷி:—"உங்கள் மாண சாசனத்தில் சொத்துக்களெல்லாவற்றையும் குறிக்கவில்லையே!—

கண்ணுயிரம் பிள்ளை:—"ஆம்! அந்த மாண சாசனத்தைக் கொண்டுவா" மீனுக்ஷி வாயு வேகமாகச் சென்று அதைக் கொண்டுவந்தாள்.

கண்ணுயிரம் பிள்ளை—அதைக் கிழித்துவிடு! நான் வேறு சாசனம் எழுதி வைக்கிறேன்.

அவள் ஸந்தோஷத்துடன் அதைக் கிழித்துவிட்டாள்.

கண்ணுயிரம் பிள்ளை:—நான் தகுந்தபடி எழுதி வைக்கிறேன்! நீயும் உன் புருஷனும் இருட்டினவுடனே வந்து அந்தப் பெட்டியை உங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்!—என்றார்.

வீட்டுக்குச் சென்றதும் மீனுக்ஷியும் அவள் புருஷனும் பேராசையுடன் பெட்டியைத் திறந்தார்கள்; திறந்ததும் திடுக்கிட்டனர்! பெட்டி நிறைய மண்! இரண்டு ஓடுகளும் இரண்டு கயிறுகளும் ஒரு காகிதத் துண்டும் இருந்தன; இருவரும் பரபரப்புடன் காகிதத்தைப் பிரித்தனர்.

(264-ம் பக்கம் பார்க்க.)




# வைடோ பெர்ரின்

TRADE ITL MARK

வைடமின் குறைவு, இரத்த மின்மை, பலஹீனம் முதலிய வற்றிற்கு

## சிறந்த டானிக்

மிகவும் இனிமையானது. மால்ட் சத்தும், தேனும் சேர்த்துச் செய்யப் பட்டது. வைடமின்கள் ஏ, பி, டியும் அயமும் கொண்டது


கவர்ன்மெண்ட் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லெபாரடரி

மல்லேஸ்வரம் :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :

**மெஸர்ஸ் பெஸ்ட் & கோ.,**

த. பெ. 63 :: மதராஸ்




# ஸ்டார் வாஷிங் ஸோப்

நம் நாட்டில் தயாரிக்கப்பட்டு தூய்மையாய் வெளுப்பதில் நிகரற்ற 'ஸ்டார் வாஷிங் ஷோப்பை' வாங்கி உபயோகித்து நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குவோருக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

---

**STAR SOAP WORKS**

Sembanar Koil, S. I. Ry.,

(Tanjore Dt.)

# சரணாகதி

(R. கோபால், திருவண்ணாமலை)

[பதினான்கு வயதுச் சிறுவன் எழுதியது]

சுந்தரமய்யர் ஒரு ரிடயர்டு ஹெட் மாஸ்டர். அவர் மிகவும் தனம் படைத்தவர். அவருக்கு ஒரே ஒரு மகன் உண்டு. ஆகையால் அவன் மிகவும் செல்வமாக வளர்க்கப் பட்டவன். அவன் பெயர் சேதுராமன். அவன் தினமும் தன் வீட்டிலிருந்து 2 மைல் தூரத்தில் இருக்கும் சரணாஸ்ரமத்திற்குப் போய் அங்குள்ள சரண ஸ்வாமியைப் பார்த்து நமஸ்கரித்துவிட்டு வருவான். ஒரு நாளும் தவறமாட்டான். ஒருநாள் சுந்தரமய்யர் தன் சொந்த செலவில் ஒரு பாட்டுக் கச்சேரி வைத்தார். தன் வீட்டில் எல்லோரையும் கூட்டிக் கொண்டு போனார். ஆனால் சேது மட்டும் வரமாட்டேன் என்று பிடிவாதம் செய்தான். சுந்தரமய்யர் அதோடு நிற்கவில்லை. "அந்த ஸ்வாமி என்ன அவ்வளவு ஒசத்தி, நான் என்ன மட்டம், நீ அங்கு போகக் கூடாது" என்றார். சேதுராமன் ஆஸ்ரமத்திற்கு ஓடிப்போய் விட்டான். இரவு 8 மணிக்கு வீடு திரும்பிய சேது, வீட்டில் அப்பாவைக் காணாமல் எங்கும் தேடி விட்டு வீட்டின் கொல்லைப் புறத்தில் இருக்கும் குட்டையில் "சரணா" என்று சொல்லிக் கொண்டே வீழ்ந்து உயிர் நீத்தான். காலையில் சுந்தரமய்யர் மனைவி ஸ்நானம் செய்வதற்குப் போனபொழுது குட்டையில் தந்தையும் மகனும் பிணமாக மிதப்பதைப் பார்த்தாள். கொஞ்ச நேரம் கழித்துக் குட்டையில் "ஓ" வென்ற சப்தம் கிளம்பிற்று. தாயும் ஆத்மாவை அந்தக் குட்டையில் நீத்தாள்.

262-ம் பக்கத் தொடர்ச்சி.

அதில் :—"நீங்கள் என்னை மோசம் செய்து என் வாயில் மண்போட்டபடியினால், உங்கள் வாயில் போட்டுக்கொள்வதற்கு மண் வைத்திருக்கிறேன். நீங்கள் என்னைப் பிச்சையெடுக்கும்படி திண்டாட விட்டபடியினால் நீங்கள் பிச்சையெடுப்பதற்கு இரண்டு ஓடுகள் வைத்திருக்கிறேன். பிச்சையெடுக்க உங்களுக்குச் சம்மதமில்லாவிட்டால் நீங்கள் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு சாகும்படி கயிறும் வைத்திருக்கிறேன்!"—என்று எழுதியிருந்தது! அதைக்கண்டதும் இருவரும்—"ஆ! ஐயோ! பணப்பேயே எங்களைக் கெடுத்தாயே!"—என்றலறிக்கொண்டு கீழே விழுந்தனர்.

* * *

கண்ணாயிரம் பிள்ளை கருணையுள்ளவராதலால் தமது மகளையும் மருமகனையும் தள்ளாமல் ஆதரித்து வந்தார்,

இதாலி தற்சமயம் யுத்தத்தில் இறங்கினல் அதனல் வரப் போகும் கெடுதல்களை இதாலியே அனுபவிக்கப் போகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் குட்பட்ட எந்த நாடுகளையாவது அது தாக்கினல், இதாலியை எதிர்த்துக் கடைசிவரை சண்டையிட பிரிட்டன் தயாராயிருக்கிற தென்று அதிகாரிகள் கூறியதாகத் தெரிகிறது.

இங்கிலாந்திலும் குண்டு மாரி பெய்தனவாம். ஆனல் எவ்விதக் கெடுதலும் நேரவில்லை யென்றும், ஒரே ஒரு கோழிக் குஞ்சு மட்டும் ஜெர்மன் குண்டுகளுக்கு இரையாயிற் றென்றும் கூறப்படுகிறது!

## இந்தியாவில்

இந்தியாவில் யுத்தத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொள்ளுகிருர்கள். வைஸ்ராய் எல்லாக் கட்சித் தலைவர்களைப் பார்த்துப் பேசினர். மற்ற மாகாணத்திலுள்ள கவர்னர்கள் பெரிய மனிதர்களுக்குப் பேட்டி கொடுத்து யுத்த விஷயங்களைப் பற்றிப் பேசினர்கள்.

வடமேற்கு மாகாணக் காங்கிரஸ் சில மாதங்களுக்கு முன்பு கூடி எல்லைப்புறத்திலுள்ள இப்பி பக்கிரி கூட்டத்தார்களைக் கண்டு பேசி ஒருவித சமாதானத்திற்கு வரவேண்டு மென்று தீர்மானித்தது. இதற்காக அவர்கள் அம் மாகாணத்துக் கவர்னரைப் பேட்டி கண்டு பேசியதில், அவர், 'இந்திய அரசாங்கம் இத் தீர்மானத்தை ஒத்துக்கொள்ளவில்லை யென்றும், அதனல் அவர்கள் கோரிக்கையை நிராகரிக்க வேண்டியிருக்கிற தென்றும்' வருத்தத்துடன் தெரிவித்தார்.

மறுபடியும் லாஹூரில் காக்ஸார் கிளர்ச்சி ஏற்பட்டது. நடந்த கலவரத்தில் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் பண்ணவே மூவர் மரண காய மடைந்தனர். பல இடங்களில் காக்ஸார்களைக் கைதி செய்தனர்.

இந்தியாவில் தேசிய முஸ்லீம் கூட்டங்களை எல்லா மாகாணங்களிலும் நடத்தி முஸ்லீம்களுக்கு உண்மையான தேசிய விஷயங்களைப் புகட்ட அநேக தேசிய முஸ்லீம் வாதிகள் முயன்று வருகின்றனர். கூடிய சீக்கிரத்தில் ஆந்திரா தேசத்தில் ஓர் கூட்டம் கூடப்படுமென்று தெரிகிறது.

இந்தியாவின் யுத்தத்தைப்பற்றிய நோக்கத்தை காந்திஜி இவ்வாரம் பேசியிருக்கிருர். இந்த நெருக்கடியான நிலையில்பிரிட்டனைச் சிரமப்படுத்த எனக்கு விருப்பமில்லை. இந்தியாவுக்கு வேண்டிய பூரண சுதந்திரத்தை பிரிட்டன் அளிக்காமலிருப்பினும் நாம் யுத்தம் அடங்கும் வரையில் காத்திருக்க வேண்டும். பிரிட்டன் அழிவிலிருந்து நாம் சுதந்திரத்தை அடையக் கூடாது. யுத்த பீதிகள் அடங்கிய பிறகு ஒத்துழையாமையோ, சத்தியாக்கிரகமோ ஆரம்பிக்க வேண்டுமே தவிர இப்பொழுது ஆரம்பிப்பது சாத்வீகப் போருக்கு அழகல்ல" எனக் கூறியிருக்கிருர்.

அபோடாபாட் என்னுமிடத்தில் நேரு, பேசுகையில், "நம் இந்தியாவுக்கு வரப் போகும் நெருக்கடியைப்பற்றி ஜனங்கள் மனத் தளர்ச்சி யடையக்கூடா தென்றும், அவர்கள் எந்த எதிர்ப்பையும் தைர்யமாக எதிர்க்கவேண்டு மென்றும், அப்படியே யுத்தம் வந்துவிட்டாலுங்கூட நாம் கடைசி வரையில் யுத்தஞ் செய்து சாகவேண்டுமே யொழிய, நாம் அந்நியர்கள் கையில் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது. பிறருக்குப் பரிசாக இவ்விந்தியாவைக் கொடுப்பதையும் நாம் விரும்பவில்லை" என்ருர்.

ஸி. ராஜகோபாலாச்சாரி ராயபுரத்தில் ஓர் சங்கத்தின் சார்பாகப் பேசியபொழுது "காங்கிரஸை எல்லோரும் பலப்படுத்த வேண்டுமென்றும், இந்தியா சுதந்திரநாடானல் தானகவே உள் நாட்டுக் கலகங்கள் தீருமென்றும், ஹிட்லருடன் சண்டையிட்டு ஜெயிக்க வேண்டுமென்ருல், பிரிட்டன் இந்தியாவின் பூரண அனுதாபத்தைப் பெற வேண்டுமென்றும் அதைப் பெற வேண்டுமானல் முதன் முதலில் இந்தியாவை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்றும்" கூறினர்.